මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.:
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2024.04.04

சுற்றறிக்கை இலக்கம் : DFD/ 2024 - I

செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
செயலாளர், மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
அனைத்து மாவட்ட செயலாளர்கள்,

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான அரிசியைக் கொள்வனவு செய்தல்

2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் நாட்டில் நிலவிய மிகவும் கடினமான பொருளாதார நிலைமைக்கு மத்தியில் பாதிப்புக்கு உள்ளான குறைந்த வருமானம் பெறும் குழுக்களின் ஊட்டச்சத்து மட்டத்தைப் பேணுவதற்கு ஆதரவு வழங்கி அந்த மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாக குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கிராம் நாட்டு அரிசியை இரண்டு (02) மாத காலத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தை முதன்மைப் பணியாகக் கருதி நீங்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கிய அதிகூடிய பங்களிப்பை மிகவும் பாராட்டுகிறேன்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் ஊட்டச்சத்து மட்டத்தை தொடர்ச்சியாகப் பேணுவதற்காக அவர்களுக்கு நிவாரணமாக அரிசியை விநியோகிக்கும் பொருட்டு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ‘குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசியை விநியோகித்தல்’ எனும் தலைப்பிலான 24/0645/601/038-I எனும் இலக்கத்தை கொண்ட 2024.04.01 ஆம் திகதியின் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் முன்மொழிவுகளுக்காக 2024.04.01 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது. இவ்வமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், 2024 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக ஒரு மாதத்திற்கு 10 கிலோ கிராம் அரிசியினை 02 மாத காலத்திற்கு நாட்டு அரிசியை விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதினால் அதற்குத் தேவையான அரிசியை மாவட்ட செயலாளர்களினால்/ பிரதேச செயலாளர்களினால் ஆற்றல் உள்ள அரிசி வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு பின்வரும் வழிகாட்டலின் கீழ் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

## 2.0 அரிசி கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம்

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பயனாளி குடும்பங்களை தெரிவு செய்யும் ஆலோசனைகளைக் கொண்டதாக அரிசி விநியோக நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சுற்றறிக்கை மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் வெளியிடப்படும். அதன் பிரகாரம் தொடர்புடைய பயனாளிகளின் எண்ணிக்கையை தீர்மானித்ததன் பின்னர், தமது மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்குவதற்குப் போதுமான நாட்டு அரிசி கையிருப்புகளைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற பொறுப்புக்கள் மாவட்டச் செயலாளர்களுக்கு/ பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரிசியை கொள்வனவு செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஆவணங்களைப் பேணுதல் மற்றும் கணக்கு வைத்தல் பொறுப்பு என்பன அரிசி கையிருப்பை கொள்வனவு செய்கின்ற மாவட்டச் செயலாளர்களுக்கு/ பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 2.1 நிதி வழங்கல் மற்றும் மீதமுள்ள நிலுவைகளைத் தீர்த்தல்

மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் மேலே 2.0 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோகிப்பதற்கு தேவையான அரிசியைக் கொள்வனவு செய்வதற்கான நிதித் தேவை குறித்து, மாவட்டச் செயலாளர்களின் மூலம், பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு தெரிவிக்க வேண்டிய அதேவேளையில், அதற்கேற்றவாறு, அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் நேரடியாக மாவட்டச் செயலாளர்களுக்கு திறைசேரி நிதியை ஒதுக்கீவதற்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கும் கட்டுநிதியினை விடுவிப்பதற்கு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கும் பரிந்துரை வழங்கப்படும். அதற்கேற்றவாறு, தேசிய வரவு செலவுத் திணைக்களம் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களுக்கு நேரடியாக வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை வழங்கும் என்பதுடன் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் குறித்த மாவட்டச் செயலாளர்களுக்கு அரிசி கொள்வனவுக்கான கட்டுநிதியை வழங்கும்.

அரிசி கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்துக்கான நிதியை, தேவைக்கேற்ப பொது திறைசேரியினால் அவ்வப்போது விடுவிக்கப்படுகின்ற அதேவேளையில், அந்த நிதியில் மீதமுள்ள நிலுவைகளை அரிசி கொள்வனவு நடவடிக்கைகள் முடிந்தவுடன், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கில் செலுத்தி, அது தொடர்பில் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு மீதமாக இருக்கின்ற நிதியை ஏனைய எந்த ஒரு பணிக்கும் பயன்படுத்திக் கொள்ளாதவாறு தொடர்புடைய மாவட்ட செயலாளர்கள் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும்.

## 2.2 அரிசியைக் கொள்வனவுசெய்வதற்கான உத்தரவாத விலை

பின்வரும் விலையில் 10 கிலோ கிராம் பொதிகளாக அரிசியைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.

| அரிசி வகை | அரிசி கொள்வனவு விலை (10 கி.கி.பொதி ஒன்றுக்காக ரூபா) |
|---|---|
| நாட்டு - புழுங்கல் அரிசி | 1,900.00 |
| நாட்டு – பச்சை அரிசி | 1,860.00 |

## 2.3 அரிசி கையிருப்பைக் கொள்வனவுசெய்தல், பொறுப்பேற்றல், களஞ்சியப்படுத்தல், மற்றும் போக்குவரத்து

2.3.1 அரிசி கொள்வனவுச் செயற்பாட்டில் உரிய தரத்திலான அரசி கையிருப்பை கொள்வனவு செய்தல், பொறுப்பேற்றல், களஞ்சியப்படுத்தல் மற்றும் அது தொடர்பான ஆவணங்களைப் பேணுதல், கணக்கு வைத்தல் மற்றும் களஞ்சியத்தில் தேவையான அரிசி கையிருப்பு உள்ளதா என்பதை உறுதிப்படுத்தி இற்றைப்படுத்துவது பற்றிய பொறுப்பு மாவட்டச் செயலாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கும் ஒப்படைக்கப்படுகின்றது.

2.3.2 மாவட்டச் செயலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களின் உதவியுடன் வழங்குநர்களிடமிருந்து மேலே 2.2 இல் குறிப்பிட்டுள்ள விலையின் அடிப்படையில் உரிய தரத்தைக் கொண்ட அரிசியை கொள்வனவு செய்தல் வேண்டும். அரிசி விநியோக நிகழ்ச்சித் திட்டம் 2024 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளபடியினால், சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள பொருத்தமான வழங்குநர்களை இந்நிகழ்ச்சித் திட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டிய அதேவேளையில், இதன் போது ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் தேவையான அரிசியைக் கொள்வனவு செய்வதற்கு அப்பிரதேச செயலக மட்டத்தில் முன்வருகின்ற வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அரிசியை கொள்வனவு செய்வது தொடர்பில் சட்டபூர்வமான தன்மையை உறுதி செய்யும் விதமாக அவ்வழங்குநர்களுடன் உடன்படிக்கையை செய்துகொள்வதற்கு மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கடந்த போகங்களின் போது மாவட்டச் செயலாளர்களினால் செயற்படுத்தப்பட்ட நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் அரிசியை வழங்குவதற்காக பங்கேற்பதற்கு எதிர்பார்ப்பாராயின், முன்னைய போகங்களில் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து நெல் கையிருப்புகளும் அரிசியாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதேபோன்று, இதற்கு முன்னைய போகங்களில் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டு தேவையான அரிசி கையிருப்புக்களை அல்லது அதன் பெறுமதியை பணமாக இதுவரை வழங்காத எந்தவொரு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைக்காது. எவ்வாறாயினும், குறித்த நிலுவை அரிசி கையிருப்புகளை அல்லது நிலுவைத் தொகையை செலுத்தி நிறைவுசெய்ததன் பின்னர் அத்திகதியிலிருந்து சம்பந்தப்பட்ட ஆலை உரிமையாளர்களை இந்நிகழ்ச்சித் திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களினால்/ பிரதேச செயலாளர்களினால் நடவடிக்கை எடுக்க முடியும்.

2.3.3 விநியோகிப்பதற்கு போதுமான அரிசி கையிருப்பு இல்லாத மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள், அரிசி கையிருப்பு காணப்படுகின்ற தங்கள் மாவட்டத்திற்கு அருகில் உள்ள மாவட்டச் செயலாளர்களுடன் கலந்துரையாடித் தேவையான அரிசி கையிருப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.3.4 மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பயனாளிகளுக்கு தேவையான அரிசியை உரிய விதத்தில் வழங்குவது மாவட்ட செயலாளர்களின் பொறுப்பாகும். அதன்படி, வழங்கப்பட உள்ள 10 கிலோ கிராம் அரிசிப் பொதிகளின் அளவு, திகதி மற்றும் இடம் குறித்த உரிய அறிவுரைகளை மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளர்கள் வழங்குநர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

2.3.5 மேலே உள்ள 2.3.4 இன்படி, சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு அமைவாக விநியோகிக்கத் தேவையான அரிசியை தொடர்புடைய மாவட்டச் செயலாளர்களினால்/ பிரதேச செயலாளர்களினால், வழங்குநர்களிடமிருந்து பெறுப்பேற்க வேண்டும். குறிப்பிட்ட அரிசி கையிருப்பை பொறுப்பேற்றதாக சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளர், அரிசி கையிருப்பு கிடைத்தமைக்கான அறிவிப்பை (GRN) அரிசி வழங்குநருக்கு வழங்க வேண்டிய அதேவேளையில், அதன் பிரதியை மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளர் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். உடன்படிக்கையின்படி அரிசி கையிருப்பை பொறுப்பேற்றதன் பின்னர் சம்பந்தப்பட்ட வழங்குநருக்கு அரிசியின் பெறுமதியைச் செலுத்துவதற்கு மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.3.6 மாவட்ட செயலாளரினால்/ பிரதேச செயலாளரினால் வழங்குநர்களிடமிருந்து அரிசி கையிருப்பைப் பெறுவது தொடர்பான அறிக்கைகளைப் பராமரிக்க வேண்டிய அதேவேளையில் அரிசி கையிருப்பு சரியான தரம் மற்றும் எடையைக்கொண்டதாக உள்ளதா என்பதைத் தொடர்ந்து கண்காணித்துப் பின்னூட்டலை மேற்கொண்டு கையிருப்பை முறையாகப் பேணுதல் வேண்டும். அரிசி கொள்வனவு செய்யும் போது குறிப்பிடப்பட்ட கையிருப்பு குறித்த அறிக்கைகளை இற்றைப்படுத்தி, அரிசி கையிருப்பு முழுவதும் விநியோகிக்கப்படும் வரை நாளாந்தம் கையிருப்பு அறிக்கைகளை பராமரித்து, அரிசி கையிருப்புகளில் எந்தவொரு பற்றாக்குறையும் இல்லை என்பதை மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர்கள் உறுதி செய்துகொள்ளுதல் வேண்டும்.

2.3.7 அரிசி போக்குவரத்தில், வழங்குநர்களின் களஞ்சியத்திலிருந்து 25 கி.மீ தூரத்திற்கு அரிசி கொண்டு செல்வதற்கான செலவு அரிசியின் விலையில் சேர்க்கப்பட்டுள்ளது. அரிசி போக்குவரத்து தூரம் 25 கிலோ மீற்றருக்கு மேற்படும் சந்தர்ப்பங்களில், அதிகரிக்கின்ற தூரத்திற்கு 1 மெட்ரிக்தொன் அரிசியை 1 கி.மீ. கொண்டு செல்வதற்கு அந்தந்த வழங்குநர்களுக்கு ரூபா 20 ஐப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

2.3.8 அரிசியைப் பொதிசெய்யும் பைகளின் விலையை உள்ளடக்கக் கூடியவாறு அரிசியின் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், அரிசியைப் பொதிசெய்யும் பைகளுக்கு மேலதிகக் கட்டணம் செலுத்தப்பட மாட்டாது.

2.3.9 இந்நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களினால் முகாமைசெய்யப்பட வேண்டும். இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் தேவையான போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு அரச நிறுவனங்களில் இருக்கும் லொறிகள் மற்றும் பாரவூர்திகளை பயன்படுத்தவும் ஏற்பாடு செய்ய முடியும்.

2.3.10 அரிசிக் கையிருப்பை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் தமது மாவட்டத்திற்குள்ளேயும் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்கு வழங்கப்பட்ட அரிசிக் கையிருப்பு பற்றிய விரிவான அறிக்கைகளை உரிய நிறுவனங்களுக்குப் பின்னூட்டல் நடவடிக்கைக்காக வழங்கக்கூடிய வகையில் வைத்திருத்தலும் கணக்கீடு செய்தலும் மாவட்ட செயலாளர்களின் பொறுப்பாகும்.

2.3.11 மேலே 2.3.2 ஆம் பந்தியின் கீழ் கைச்சாத்திடப்படும் உடன்படிக்கைகளுக்கு இணங்க உரிய அரிசிக் கையிருப்பை வழங்காத வழங்குநர்கள் தொடர்பில் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தொடர்புடைய மாவட்ட செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**3.0 ஏனைய விடயங்கள்**

அரிசி கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மாவட்டச் செயலாளர்களினால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

3.1 ஒவ்வொரு மாவட்டத்திலும் அரிசி கொள்வனவு மற்றும் விநியோக நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட செயலகத்திலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டிய அதேவேளையில், அவ்வுத்தியோகத்தரின் பெயர், பதவி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பவற்றை நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு வழங்குதல் வேண்டும்.

3.2 களஞ்சியங்களிலுள்ள அரிசி கையிருப்புகளைப் பாதுகாப்பதற்குத் தேவைக்கேற்ப சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு மாவட்டச் செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய அதேவேளையில், சேகரிக்கப்பட்ட அரிசி கையிருப்பை சுகாதார பாதுகாப்பு முறையில் பராமரிப்பது பற்றி பின்னூட்டம் செய்தல் வேண்டும்.

3.3 நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்ட தொழிற்பாட்டு செலவினங்களை உரிய நிதிப் பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய அரச அனுமதிகளுக்குட்பட்டு மேற்கொள்வதற்கு மாவட்டச் செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய அதேவேளையில், இது சம்பந்தமாக ஏதேனும் பிரச்சனைகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகளைக் கேட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 அரிசி கொள்வனவு மற்றும் நிதிப் பயன்பாடு பற்றிய நாளாந்த முன்னேற்றத்தை **பின்னிணைப்பு 01** இன்படியும் அரிசி விநியோகத்தின் நாளாந்த முன்னேற்றத்தை **பின்னிணைப்பு 02** இன்படியும் தயாரித்து பொது திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். இதன் போது பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தகவல்களைச் சரியாகப் பெற்று, அத்தகவல்களை இற்றைப்படுத்துதல் மற்றும் அறிக்கையிடுதல் பற்றிய பொறிமுறையொன்றை சகல மாவட்ட செயலகங்களிலும் மாவட்ட செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் பேணி வரவேண்டிய அதேவேளையில், அரிசி கையிருப்பு தகவல் அடிக்கடி மாற்றமடையாதவாறு சரியான தகவல்களை மாத்திரம் பேணி வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 அரிசி கொள்வனவு செய்து விநியோகித்து நிறைவடைந்த தினத்திற்குப் பின்னர் தொடர்புடைய மாவட்டச் செயலாளரின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அரிசி கையிருப்பு மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி தொடர்பான விபரமான குறிப்பு ஒன்றை **பின்னிணைப்பு 03** இற்கு அமைவாகத் தயாரித்து மாவட்டச் செயலாளரின் கையொப்பத்துடன் பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

3.6 இந்நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை தேசிய முன்னுரிமையாகக் கருதி அரசாங்கத்தின் செலவுகளை குறைக்கக்கூடிய விதத்திலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அதிகபட்ச நிவாரணம் கிடைக்கக்கூடிய விதத்திலும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக ஒட்டுமொத்த அரசாங்க சேவையும் அர்ப்பணிப்புடன் முன்மாதிரியாக செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அரிசி விநியோக நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களைத் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இலக்கம் 011-2484542, 011-2484595 மற்றும் 011-2484596 மின்னஞ்சல் முகவரி : dgdf@dfd.treasury.gov.lk, kumara.shv@dfd.treasury.gov.lk, thushari.wan@dfd.treasury.gov.lk மற்றும் dfdmofdata2015@gmail.com).

**ஒப்பம்/கே.எம்.மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம் - தகவலுக்காக
2. செயலாளர், கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு - தகவலுக்காக
3. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
4. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
5. பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
6. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
7. பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
8. பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
9. ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
10. தலைவர், நலன்புரி நன்மைகள் சபை - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
11. பணிப்பாளர், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
12. கணக்காய்வாளர் தலைமையதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம் – தகவலுக்காக

Annexure 01

## Rice Distribution for Low-income Families - April/May 2024

## Purchasing progress as at ........................2024

**District :** ......................................................

| # | Supplier information | | | Rice quantity purchased (No of 10kg bags) | | | Expenditure for purchased Rice (Rs) | | | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Name | Address | NIC Number | Nadu Raw Rice | Nadu Par-boiled | Total | Nadu Raw Rice | Nadu Par-boiled | Total | |
| | *(A)* | *(B)* | *(C )* | *(D)* | *(E)* | *(F)=(D+E)* | *(G)* | *(H)* | *(I)=(G+H)* | *(J)* |
| 1 | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | |
| .... | | | | | | | | | | |
| .... | | | | | | | | | | |
| .... | **Total** | | | | | | | | | |

**Certification**

I /We hereby certify that the above details of the purchasing and distribution of rice and related cost under the Rice Distribution programme in ...................... district.

............................
Prepared by

Name :
Designation :
Date :

............................
Checked by

Name :
Designation :
Date :

............................
Approved by

Name :
Designation :
Date :

Annexure 02

## Rice Distribution for Low-income Families - April/May 2024

## Distribution progress as at ........................2024

| District | 1st phase | | | 2nd phase | | |
|---|---|---|---|---|---|---|
| | No. of Benificiary families to be recieved rice | No. of Benificiary families recieved rice | Quantity distributed (No of 10kg bags) | No. of Benificiary families to be recieved rice | No. of Benificiary families recieved rice | Quantity distributed (No of 10kg bags) |
| | | | | | | |

**Certification**

I /We hereby certify that the above details of the distribution of rice under the Rice Distribution programme in ............................ district.

| ............................ | ............................ | ............................ |
|---|---|---|
| Prepared by | Checked by | Approved by |
| Name : | Name : | Name : |
| Designation : | Designation : | Designation : |
| Date : | Date : | Date : |

Annexure 03

**Rice Distribution for Low-income Families - April/May 2024**

**Final report on Purchasing paddy, receiving rice and settling Funds**

**District : ......................................................**

| # | Supplier information | | | Rice quantity purchased (No of 10kg bags) | | | Payments for Rice suppliers (Rs) | | | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Name | Address | NIC Number | Nadu Raw Rice | Nadu Par-boiled | Total | Nadu Raw Rice | Nadu Par-boiled | Total | |
| | *(A)* | *(B)* | *(C )* | *(D)* | *(E)* | *(F)=(D+E)* | *(G)* | *(H)* | *(I)=(G+H)* | *(J)* |
| 1 | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | |
| .... | | | | | | | | | | |
| .... | | | | | | | | | | |
| .... | Total | | | | | | | | | |

| Description | Rs. | |
|---|---|---|
| Allocation received | | |
| **Imprest received** | | |
| **Expenditure** | **0.00** | |
| *Rice purchasing cost* | | |
| *Rice distribution cost* | | |
| *Other cost* (mentione pls.)* | | |
| **Balance** | **0.00** | **(To be settled to the TOD with a copy to DFD)** |

**Certification**

I /We hereby certify that the above details of the purchasing and distribution of rice and related cost under the Rice Distribution programme in .................................. district.

| ............................ | ............................ | ................................................ |
|---|---|---|
| Prepared by | Checked by | Approved by District Secretary |
| Name : | Name : | |
| Designation : | Designation : | |
| Date : | Date : | |